பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

04 11 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளின் இரண்டாவது கட்டம் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களில் இன்று தொடங்குகிறது.

2. பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 121 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவு பெறுகிறது.

3. கத்தார் தலைநகர் தோஹாவில் இன்று தொடங்க உள்ள சமூக வளர்ச்சிக்கான உலக உச்சிமாநாட்டில் மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமையிலான இந்திய குழு பங்கேற்கிறது.

4. நடப்பு நிதியாண்டில் கடந்த மாதம் சரக்கு மற்றும் சேவை வரியாக ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 936 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. மகளிர் லீக் கால்பந்து போட்டியின் முதற்கட்ட ஆட்டங்கள் அடுத்த மாதம் 20ஆம் தேதி தொடங்கும் என்று இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளின் இரண்டாவது கட்டம் 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன்பிரதேசங்களில் இன்று தொடங்குகிறது.

உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், மேற்குவங்கம், குஜராத், சத்தீஸ்கட், கேரளா, அசாம், தமிழ்நாடு மற்றும் அந்தமான் நிகோபார், லட்சத்தீவுகள், புதுச்சேரி ஆகிய யூனியன்பிரதேசங்களிலும் உள்ள சுமார் 51 கோடி வாக்காளர்களின் இல்லங்களுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் சென்று கணக்கெடுப்புப் பணியை நடத்த உள்ளனர்.

தகுதியான வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபடாமல் இருப்பதை உறுதிப்படுத்தவும், தகுதியற்ற வாக்காளர்களை நீக்கவும் இந்தப் பணி நடைபெற உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அடுத்த மாதம் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தப் பணியின்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர் தரும் இரண்டு படிவங்களை வாக்காளர்கள் நிரப்பி தர வேண்டும்.

தேவைப்பட்டால் கணக்கெடுப்பு படிவத்தில் சமீபத்திய புகைப்படத்தையும் ஒட்டலாம்.

இந்தக் கணக்கெடுப்பின்போது வாக்காளரிடமிருந்து எந்தவொரு ஆவணமும் சேகரிக்கப்படாது என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 9ஆம் தேதி வெளியிடப்படும்.

வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க மற்றும் நீக்குவதற்கு அடுத்த மாதம் 9ஆம் தேதி முதல் ஜனவரி மாதம் 8ஆம் தேதி வரை விண்ணப்பம் செய்யலாம்.

இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 7ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

இந்நிலையில் பிஜேபி மூத்த தலைவர் திரு. நரேந்திர மோடி இன்று பிஹார் மாநிலத்தில் “எனது வாக்குச்சாவடி வலிமையான வாக்குச்சாவடி” என்ற இயக்கத்தின்கீழ் பெண் வாக்காளர்களுடன் இன்று கலந்துரையாட உள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க தாம் மிகுந்த உற்சாகத்துடன் இருப்பதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டமன்ற தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியை உறுதி செய்வதற்காக பெண்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாக கூறியுள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தில் அவர்களது தீவிர பங்கேற்பு அம்மாநிலத்தில் ஜனநாயக நடைமுறையை வலுப்படுத்துகிறது என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 121 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவு பெறுகிறது.

இதையடுத்து அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்த்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு. நரேந்திர மோடி, திரு. அமித் ஷா உள்ளிட்டோரும், மகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், சி.பி.எம். மூத்த தலைவர் திருமதி பிருந்தா காரத் ஆகியோரும் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

முதற்கட்ட வாக்குப்பதிவு வரும் வியாழக்கிழமை நடைபெற உள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருவதோடு வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்க போதுமான ஏற்பாடுகள் செய்யப்படும்

என்று பிஹார் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. வினோத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உத்தராகண்ட் மாநிலம் நைனிடாலில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இன்று பிற்பகல் Kumaon பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் அவர் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

முன்னதாக இன்று நீம்கரோலி பாபா ஆசிரமம் மற்றும் Kainchi Dham புனித ஸ்தலத்திற்குச் செல்கிறார்.

குடியரசுத்தலைவரின் வருகையை ஒட்டி நைனிடாலில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்திய கயிறுக்கு உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றுத்தரும் வகையில் தரமான தயாரிப்புகளை உருவாக்க வேண்டும் என்று உற்பத்தியாளர்களை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கேரள மாநிலம் கொல்லத்தில் நேற்று இந்திய கயிறு ஏற்றுமதியாளர்கள் சங்க கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய அவர், தாம் கயிறு வாரிய

தலைவராக இருந்தபோது ஏற்றுமதி இரண்டு மடங்காக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

உலக அளவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால் கயிறு துறைக்கு இருக்கும் வாய்ப்புகளை கண்டறிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்திய கயிற்றின் தரம் மற்றும் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்த பாரம்பரிய அறிவுடன் நவீன தொழில்நுட்பத்தையும் புகுத்த வேண்டும் என்று உற்பத்தியாளர்களை குடியரசு துணைத்தலைவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

கத்தார் தலைநகர் தோஹாவில் இன்று தொடங்க உள்ள சமூக வளர்ச்சிக்கான உலக உச்சிமாநாட்டில் மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமையிலான இந்திய குழு பங்கேற்கிறது.

நாளை மறுநாள் வரை 3 நாட்கள் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பங்கு குறித்த கருத்தரங்கிலும் அமைச்சர் பங்கேற்கிறார்.

இந்தியாவில் வறுமையைக் குறைப்பதில் அடைந்துள்ள முன்னேற்றம் கடந்த 10 ஆண்டுகளில் வறுமையில் இருந்து லட்சக்கணக்கான மக்களை விடுவிப்பதற்கு மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளையும் இந்த மாநாட்டில் இந்திய பிரதிநிதிகள் விளக்க உள்ளனர்.

இந்த உச்சிமாநாட்டின்போது அமைச்சர் திரு. மாண்டவியா, கத்தார், ருமேனியா, மொரீஷயஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அமைச்சர்களையும், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தலைமை இயக்குநரையும் சந்தித்துப் பேச உள்ளார்.

<<<<>>>>

ஹைதராபாத் மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கம் தொடர்பான திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு மத்திய அரசிடம் இன்னும் சமர்ப்பிக்கவில்லை என்று மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துவது குறித்த ஒப்பந்தம் பற்றி மத்திய அரசுக்கு முறைப்படி தெரிவிக்கப்படவில்லை என்றார்.

முதற்கட்டத்திற்காக எல்.என்.டி. நிறுவனத்தின் பங்கு முதலீட்டிற்கு 2 ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலுத்தி அத்திட்டத்திற்கான 13 ஆயிரம் கோடி ரூபாய் கடனை மாநில அரசு ஏற்க முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

இரண்டாவது கட்ட நிதியை ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை போன்ற பல்வேறு நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் பெறுவதற்கு மத்திய அரசுடன் இணைந்து கூட்டு முயற்சி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டில் கடந்த மாதம் சரக்கு மற்றும் சேவை வரியாக மத்திய அரசுக்கு ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 936 கோடி ரூபாய் கிடைத்துள்ளது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் கிடைத்த வரி வருவாயை விட 4 புள்ளி 6 சதவீதம் அதிகமாகும்.

மொத்த சரக்கு மற்றும் சேவை வரி வருவாயில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா, குஜராத் மற்றும் ஹரியானா மாநிலங்கள் 40 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வழங்கியுள்ளன.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் 11 ஆயிரத்து 188 கோடி ரூபாய் சரக்கு மற்றும் சேவை வரி கிடைத்த நிலையில் இந்த ஆண்டு அந்த வருவாய் 11 ஆயிரத்து 588 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

2027ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெற உள்ள நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் மாதிரி கணக்கெடுப்பு பணியை மேற்கொள்ள 17 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த கிராமங்களில் இம்மாதம் 10ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை வீடுவீடாக மாதிரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முதல் முறையாக செயலி மூலமாக மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

(Voice Byte - Pratap - 49 Sec)

<<<<>>>>

மகளிர் லீக் கால்பந்து போட்டியின் முதற்கட்ட ஆட்டங்கள் அடுத்த மாதம் 20ஆம் தேதி தொடங்கி ஜனவர் மாதம் 6ஆம் தேதி வரை நடைபெறும் என்று இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

இரண்டாம் கட்டப் போட்டிகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் தேதி தொடங்கி மே மாதம் 10ஆம் தேதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகளிர் லீக் கால்பந்து போட்டியில் 8 அணிகள் பங்கேற்க உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---------------

சீன தைபேயில் நடைபெறும் சாலஞ்சர் கோப்பைக்கான டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் இந்தியாவின் Rawat - செக் குடியரசின் Vrvensky-யையும், சசிகுமார் - ஜப்பானின் Uchida-வையும் எதிர்கொள்கின்றனர்.

------------

தமிழகத்திற்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விதர்பா அணி வலுவான நிலையில் உள்ளது.

கோவையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான நேற்று தமிழக அணி, இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 6 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் 501 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<The End>>>>